அன்பால் ஜெயிப்போம் சாம்பா..!

பாடல்-1

என் காலத்துல கெட்டது உன் காலத்துல.. நல்லது..நல்லது..நல்லது. — பெண்-1, ஆண்குரல்
உன் காலத்துல கெட்டது என் காலத்துல.. நல்லது..நல்லது..நல்லது.
கெட்டது நல்லது இப்போ.. நல்லது கெட்டது எப்போ.. — ஆண் குரல்
இப்போ.. எப்போ.. இப்போ...

ஆஹா ஜூட்..விழித்திடு..எழுந்திடு..நடந்திடு..பறந்திடு.. ஜூட்.. — பெண் குரல்-3
முழிடா முழிடா என் சோம்பா..நெட்டி — பெண் குரல்-2
முறிடா முறிடா என் சோம்பா ..கட்டி
அழுடா சிரிடா என் சோம்பா..
எ எ எ ஏ யே.. — பெண் குரல்-1, 2

கெட்டதை எதிர்ப்போம் சாம்பா..அத — பெண் குரல்-3
அன்பால் ஜெயிப்போம் சாம்பா..இப்ப
அதுதான் நல்லது சாம்பா..
எ எ எ ஏ யே.. — பெண் குரல்-1, 2

உனக்கு சோறு சும்மா இப்ப கெடச்சா உன் — பெண் குரல்-1
கையும் காலும் காஞ்சுபோன மட்டைடா.. நீ
ஒன்னு ரெண்டு போட்டு அசைச்சா... உன்
கையி தட்டு மஞ்சை விரட்டும்..! நீ
நாலு எட்டு வைச்சு நடந்தா உன்
காலு மெட்டில் பொண்ணு ஆடும்..!

ஆஹா ஜூட்..விழித்திடு.. எழுந்திடு.. நடந்திடு.. பறந்திடு.. ஜூட்.. — பெண் குரல்-3
முழிடா முழிடா என் சோம்பா..நெட்டி — பெண் குரல்-2
முறிடா முறிடா என் சோம்பா ..கட்டி
அழுடா சிரிடா என் சோம்பா..
எ எ எ ஏ யே.. — பெண் குரல்-1, 2

ஓய் சிகப்பா..பொன்ன மண்ண காய கனிய பூத்தாயிட்ட.. — பெண் குரல்-1
த்துத்தின்னு.. த்துத்தின்னு.. த்தித்தின்னாதே.. — பெண் குரல்-2
வித்துத்தின்னு.. வெட்டித்தின்னு.. சும்மாத்தின்னாதே..
பறிச்சுத்தின்னு.. பழுத்துத்தின்னு.. சும்மாத்தின்னாதே..

ஏய் கருப்பா..மாட்ட ஆட்ட காடை கோழிய காத்தாயிட்ட.. — பெண் குரல்-1
த்துத்தின்னு.. த்துத்தின்னு.. த்தித்தின்னாதே.. — பெண் குரல்-2
கறந்துத்தின்னு..வெட்டித்தின்னு...சும்மாத்தின்னாதே..
புடிச்சுத்தின்னு..அடிச்சுத்தின்னு.. சும்மாத்தின்னாதே..

ஏய் நெருப்பா..சிலுக்கு சிமிட்டி கரும்பு இரும்ப மேத்தாயிட்ட.. — பெண் குரல்-1
திருடித்தின்னு.. பிழைச்சுத்தின்னு.. சும்மாத்தின்னாதே.. — பெண் குரல்-2
சுரண்டித்தின்னு.. உழைச்சுத்தின்னு.. சும்மாத்தின்னாதே...
த்துத்தின்னு.. த்துத்தின்னு.. த்தித்தின்னாதே..

ஆஹா ஜூட்..கெட்டதை எதிர்ப்போம் சாம்பா.. அத — பெண் குரல்-3
அன்பால் ஜெயிப்போம் சாம்பா.. இப்ப
அதுதான் நல்லது சாம்பா..
எ எ எ ஏ யே.. — பெண் குரல்-1, 2

என் காலத்துல கெட்டது உன் காலத்துல நல்லது..நல்லது..நல்லது — பெண்-1, ஆண் குரல்
உன் காலத்துல கெட்டது என் காலத்துல..நல்லது..நல்லது..நல்லது.
நல்லது கெட்டது எப்போ.. கெட்டது நல்லது இப்போ.. — ஆண் குரல்
இப்போ... எப்போ.. இப்போ...

- அருள்சந், திருச்சி-25, 16-12-2021 to 12-01-2022